# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**அசல் மனு எண். 694/2016**

**ஆணை எண். 195/2016**

**நாள் : 03/12/2016**

திரு. ஏ. பாலசுப்ரமணியன்,
24, பாப்பன் கிணத்து தெரு,
பெருமாள் மேஸ்திரி வீதி(தெற்கு),
மதுரை – 07. – முறையீட்டு மனுதாரர்

திரு. எல். ஆறுமுகம்,
வரி தண்டலர்,
மதுரை மாநகராட்சி, மதுரை. – எதிர் மனுதாரர்

மதுரை மாநகராட்சி, தெற்கு பெருமாள் வீதி, 24, பாப்பன் கிணத்துத் தெரு முகவரியில் வசிக்கும் திரு. A பாலசுப்ரமணியன் அவர்களது 13.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2016 அன்று பெறப்பட்டு 694/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாநகராட்சி, 24, பாப்பன் கிணத்துத் தெரு முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. A பாலசுப்ரமணியன் அவர்கள் மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் வரித்தண்டலர் திரு L ஆறுமுகம் அவர்கள் கோரிய கையூட்டு பணம் வழங்காததால், பழிவாங்கும் நோக்குடன் 01.04.2015 முதல் அரையாண்டு வரியாக ரூ.4,121/– நிர்ணயம் செய்து தனக்கு நினைவூட்டு அறிவிப்பு வழங்கியுள்ளார் என்றும், தவறாக வரிவிதிப்பு செய்த வரித்தண்டலர் திரு L. ஆறுமுகம் அவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்படி முறையீடு சம்பந்தமாக மனுதாரரிடம் 07.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 462 சதுர அடிபரப்பளவுள்ள தரை தளம் மற்றும் 462 சதுர அடி அளவுள்ள முதல் தளக் கட்டிடம், குடியிருப்பு என வகைப்படுத்தப்பட்டு அரையாண்டுக்கு ரூ. 3,222/– என கேட்பு அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றும் அத்தொகையை 04.01.2016 அன்று கட்டிவிட்டதாகவும் விசாரணையின் போது மனுதாரர் தெரிவித்தார். ஒரு மாதத்திற்கு முன்பு ரூ.4121/– என வரி விதிப்பு செய்து தனக்கு கேட்பு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் பின்பு 3 நாட்களில் ஜப்தி நோட்டீஸ் வந்தது என்றும் தெரிவித்தார். மேலும் வரித்தண்டலர் திரு. L. ஆறுமுகம் கட்டிடம் கட்டும் பொழுது சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்து ரூ.15,000/– கையூட்டு பணம் கோரியதாகவும், அத்தொகையை கொடுக்க மறுத்ததாகவும் மனுதாரர் தெரிவித்தார். வரித்தண்டலர் கோரிய கையூட்டு பணம் வழங்காத

/2/

காரணத்தால் ஜப்தி நோட்டீஸ் வழங்கியுள்ளார் என்று மனுதாரர் விசாரணையில் தெரிவித்தார். ஜப்தி நோட்டீசு வந்த மறுநாள் மண்டல அலுவலகத்தில் திரு. L. ஆறுமுகம் அவர்களை நேரில் சந்தித்து தனக்கு ஏன் ஜப்தி நோட்டீசு அனுப்பியுள்ளீர்கள் என்று கேட்டதற்கு, புதிதாக தெரிவித்துள்ள அறிவிப்புத் தொகையை கட்டவேண்டும் என்றும் அப்பொழுது கையூட்டு பணம் எதுவும் கேட்கவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

3. மனுதாராரிடம் விசாரணை மேற்கொண்ட அதே நாளில் எதிர் மனுதாரரும் வரித்தண்டலருமான திரு. L. ஆறுமுகம் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் வீட்டிற்கு வரிவிதிப்பு செய்யும் நடவடிக்கை அலுவலகத்தில் பரிசீலனையில் இருக்கும்பொழுது தனக்குத் தெரியாமல் மனுதாரர் வேறு ஒருவர் மூலமாக வரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டார் என்றும் குறைவாக வரிவிதிப்பு செய்ததை உறுதிப்படுத்திக் கொண்டபின் தானும் மற்ற அலுவலர்களும் 20.04.2016 அன்று கட்டிடத்தைப் பார்வையிட்டு கட்டிட அளவை உறுதி செய்து கொண்டு ஏற்கனவே வரிவிதிப்பு செய்ததை நீக்கம் செய்து அரையாண்டு சொத்து வரி ரூ.4121/– என நிர்ணயிக்கப்பட்டது என விசாரணையின் போது தெரிவித்தார். சொத்துவரி முதலான வரிகளை நேரில் சென்று வசூல் செய்வது, புதிய கட்டிடங்களை நேரில் சென்று அளந்து பார்த்தல் போன்றவை வரித்தண்டலர்களின் பணி என்றும் தன்னோடு இரண்டாவது முறையாக அளவை சரிபார்த்தவர்கள் வருவாய் ஆய்வாளர் திரு ஜவஹர், உதவி வருவாய் ஆய்வாளர் திரு. சரவணன் மற்றும் உதவி ஆணையர் திரு. செல்லப்பா ஆகியோர் எனவும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும் தானும், சிறப்பு வருவாய் ஆய்வாளர் முதலான அதிகாரிகளும் ஆய்வு செய்து வரிவிதிப்பு செய்த ஆணையின் நகல்களையும் விசாரணையின் போது சமர்ப்பித்தார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை தொடர்ந்து மதுரை மாநகராட்சி உதவி வருவாய் ஆணையர் திரு. எஸ். சரவணன் அவர்களிடமும் 23.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் கட்டிடத்திற்கு வரித்தண்டலர் மற்றும் வருவாய் ஆய்வாளரும் அளந்து வரி நிர்ணயம் செய்து உதவி வருவாய் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று வரி நிர்ணயம் செய்து விட்டனர் என்றும் கூடுதலாக ஹெட்ரூம் கட்டிய விவரம் அறிந்து இரண்டாம் முறையாக வரித்தண்டலர் மட்டும் கட்டிடத்திற்கு சென்று அளவு செய்துள்ளார் என்றும், அப்போது வருவாய் ஆய்வாளர்கள், உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையர் வரித்தண்டலருடன் செல்லவில்லை என்றும் வரித்தண்டலர் அளவு செய்ததின்அடிப்படையில் ஒப்புதல் பெற்று அறிவிப்பாணை வழங்கப்பட்டது என விசாரணையின் போது உதவி வருவாய் அலுவலர் தெரிவித்தார். மேலும் இரண்டாவது முறையாக வரித்தண்டலர் எடுத்த அளவுகளும் விதித்த சொத்துவரியும் தவறுதலாகவே உள்ளது என்றும், தல ஆய்வு செய்து சரியான சொத்து வரிவிதிப்பு செய்யப்படும் எனவும் இது சம்பந்தமாக 10 தினங்களில் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து உதவி வருவாய் அலுவலர் திரு சரவணன் மனுதாரர் முன்னிலையில் அளவுகள் எடுக்கப்பட்டு, அளவுகளின் அடிப்படையில் கேட்பு அறிவிப்பு செய்து மனுதாரரிடம் 01.10.2016 அன்று வழங்கப்பட்டது என்றும் அதற்கு மனுதாரரின் ஒப்புதலும் பெறப்பட்டது என்றும் 01.10.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். திருத்திய கேட்பு அறிவிப்பின்படி சொத்து வரி ரூ.3,169/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரும் மேற்படி தொகைக்கான கேட்பு அறிவிப்பாணை பெற்றுக்கொண்டுள்ளார்.

5. இந்நேர்வில் மனுதாரருடைய கட்டிடத்திற்கு சொத்துவரி முதலில் ரூ.3,022/– என நிர்ணயம் செய்தது தவறு எனக்கருதி ரூ.4,121/– என சொத்து வரி நிர்ணயம் செய்து கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. வரித்தண்டலர் மற்றும் பிற அலுவலர்கள் மேற்கொண்ட அளவைகளின் அடிப்படையில் சொத்து வரி ரூ.4,121/– என நிர்ணயம் செய்யப்பட்டது என விசாரணையின்போது வரித்தண்டலர் கூறிய கூற்று ஏற்புடையதாக இல்லை. இதனை உதவி வருவாய் அலுவலரும் விசாரணையின்போது உறுதி படுத்தியுள்ளார். மனுதாரர் கட்டிடம் கட்டும்பொழுது சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்து தனக்கு ரூ.15,000/– கையூட்டுப் பணம் வழங்கவேண்டும் என்று வரித்தண்டலர் கோரியதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்படி கையூட்டு பணம் தராத நிலையில் சொத்துவரி நிர்ணயம் செய்ததை மறு ஆய்வு செய்து திருத்திய சொத்து வரி ரூ.4,121/–க்கான அறிவிப்பு நோட்டீசு

வரித்தண்டலரால் வழங்கப்பட்டுள்ளது. தனக்கு தெரியாமல் வேறு ஒருவர் மூலம் மனுதாரர் வரிவிதிப்பு செய்திட ஏற்பாடு செய்து விட்டார் என்பதை எதிர்மனுதாரர் திரு. ஆறுமுகம் இம்முறைமன்ற விசாரணையின்போது ஏற்றுக்கொண்டுள்ளார். மேலும் உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலத்தை பரிசீலிக்கும்போது வரித்தண்டலர் தனது இரண்டாவது ஆய்வின்போது சில அலுவலர்கள் வந்ததாக குறிப்பிட்டது உண்மையில்லை என்பது புலனாகிறது. மேலும் வரித்தண்டலர் திரு. L. ஆறுமுகம் அவர்களால் வரிவிதிப்பு செய்யப்பட்டது தவறு எனவும் தற்போது சரியான ஆணை இடப்பட்டுள்ளது எனவும் உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலத்திலும் அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளார். வரித்தண்டலர் திரு. L. ஆறுமுகம் அவர்களின் இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. கட்டிடங்களின் சரியான அளவுகள் உரிமையாளர்கள் முன்னிலையில் எடுக்கப்பட்டு விதிகளின்படி அளவுகளுக்கேற்ப சொத்துவரி விதிப்பதே முறையாகும். இந்நேர்வில் வரித்தண்டலர் திரு. L. ஆறுமுகம் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்பட்டு கூடுதலாக வரிவிதிப்பு செய்வதற்கு முயன்றுள்ளார். புகார்மனு மற்றும் விசாரணைகள், தொடர்புடைய ஆவணங்கள், வாக்குமூலங்கள் அனைத்தையும் மிக்க கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. ஒரு வரித்தண்டலர் நினைத்தால் நியாயங்களுக்கு அப்பாற்பட்டு ஒரு குடிமகனை எவ்வாறு வேண்டுமானாலும் அலைக்கழிக்கலாம் என்பது இதன்மூலம் தெரியவருகின்றது. ஒரு வரித்தண்டலர் சர்வஅதிகாரம் கொண்டவராக தன்னை நினைத்துக் கொண்டு செயல்பட்டிருப்பது வெட்டவெளிச்சமாகின்றது. எனவே, விதிகளுக்கு புறம்பாக மாநகராட்சி அலுவலர்கள் செயல்படுவதை அனுமதிக்கலாகாது. எனவே, வரித்தண்டலர் திரு. L. ஆறுமுகம் அவர்கள் மீது மாநகராட்சி விதிகளின்படி உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு வழங்கப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

திரு. ஏ. பாலசுப்ரமணியன்,
24, பாப்பன் கிணத்து தெரு,
பெருமாள் மேஸ்திரி வீதி(தெற்கு),
மதுரை – 07.

திரு. எல். ஆறுமுகம்,
வரி தண்டலர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.